Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.295/2019 Date: 26.11.2024
Deposition of witness for prosecution: PW 1 ( LW1)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.குணசேகரன் | Caste | |
| Father/ Husband Name | ராசு | Calling | விவசாயம் |
| Village | வாலிபாறை | Religion | இந்து |
| Taluk | ஆண்டிப்பட்டி | Age | 60 /2024 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 26.11.2024 TIME 12.45 P**m**

1ம் எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜரில்லை. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

1.வானதி எனது மகள் ஆவார் 1வது எதிரி எனது மருமகன். 2, 3 எதிரிகள் எனது சமந்தாரர்கள். 4வது எதிரி என் மருமகனின் சகோதரர் ஆவார். எனது மகள் வானதிக்கும் கம்பத்தைச் சேர்ந்த பிரகாஷ் என்பவருக்கும் கடந்த 29.06.2012 ஆம் தேதி பெரியவர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது திருமணத்திற்கு பிறகு நாங்கள் வழக்கமான ஆடி தீபாவளி சீர்வரிசைகள் செய்தோம். எனது மகள் 4 மாதம் கர்ப்பமாக இருக்கும் போது என் வீட்டிற்கு வந்து என் மருமகன் விட்டுச் சென்ற அதன் பிறகு வளைகாப்பு நிகழ்ச்சிக்கு சொல்லிவிட்டும் எனது மருமகன் வீட்டார் யாரும் வரவில்லை. திருமணம் ஆகி 23 மாதம் கழித்து தேனி க.விலக்கு மருத்துவமனையில் ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்ததற்கு சொல்லிவிட்டு அன்றைய தினம் ஒருவரும் வரவில்லை. மறுநாள் எனது மருமகன் மற்றும் அவரது குடும்பத்தினர் அனைவரும் வந்து பார்த்தார்கள்.

2.அதன் பிறகு குழந்தைக்கு செய்ய வேண்டிய சீர்வரிசை பொருள்கள் செய்து சுமார் ஒரு மாதம் கழித்து அனுப்பி வைத்தோம். சிறிது நாட்களில் எனது மகள், என் மருமகன் வீட்டில் வாழ்ந்து வந்த போது உத்தமபாளையம் பாலத்திற்கு அருகே விஷம் அருந்தி தற்கொலை முயற்சி செய்ததாக என் மருமகன் வீட்டார் தகவல் தெரிந்து அவரை உத்தமபாளையம் அரசு மருத்துவமனையில் சேர்த்து, எங்களுக்கு தகவல் சொல்லி நாங்களும் சென்று பின்னர் தேனி மருத்துவமனையில் மேல் சிகிச்சை பெற்று அவர் குணமடைந்துவிட்டார். அப்போது எனது மருமகன் வீட்டாரும் மருத்துவமனைக்கு வந்து உடன் இருந்தார்கள். என் மகள் மருத்துவமனையில் குணமடைந்த பிறகு சத்துணவில் படித்துக் கொண்டிருந்த எனது பேரன் என் மருமகன் வீட்டிற்கு தெரியாமல் எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டார். அது முதல் இருவருக்கும் கருத்து வேறுபாடு இருந்து வந்தது ஆனால் இருவருக்கும் சண்டை எதுவும் இல்லை .

3.பின்னர் சுமார் ஆறு வருட காலம் என் மகளை அழைத்து வாழ வரவில்லை. அதன் பின்னர் ஆண்டிபட்டி காவல் நிலையத்தில் நாங்கள் என்

மருமகன் மற்றும் அவரது வீட்டார் மீது புகார் கொடுத்து அதில் எங்களுக்கு சேர வேண்டிய திருமணத்தின் போது அணிவித்த 20 நகைகளை கேட்டு புகார் கொடுத்திருந்தோம். என் மருமகன் வீட்டார் தரப்பில் ஆஜராகி 7 பவுன் நகைகளை கொடுத்துவிட்டு மீதி நகைகளை 40 நாட்களில் தருவதாக கூறி சென்றவர்கள். 40 நாட்கள் கழித்து வழக்கறிஞர் மூலம் விவகாரத்து வழக்கு தாக்கல் செய்திருப்பதாக எங்களுக்கு அறிவிப்பு வந்தது. அதன் பின்னர் நாங்கள் மேற்படி வழக்கை நடத்தி என் மருமகன் என் மகளோடு சேர்ந்து வாழ வேண்டும் என்று எங்களுக்கு சாதகமாக உத்தரவு ஏற்பட்டுள்ளது. அதன் பின்னரும் எனது மருமகன் என் மகளுடன் சேர்ந்து வாழ மறுத்து வருகிறார். என் மகள் அடிக்கடி தன் கணவர் வீட்டிற்கு சென்று சுமார் இரண்டு மூன்று நாட்கள் தங்கி இருந்து மீண்டும் எங்கள் வீட்டிற்கு வந்து விடுவார். என் பேரன் எங்கள் வீட்டில் படித்து வருகிறார். நாங்கள் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இடம் புகார் கொடுத்து அந்தப் புகார் உத்தமபாளையம் காவல் நிலையத்திற்கு அனுப்பப்பட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. அந்த மனு வரதட்சணை கேட்டு கொடுத்தது போல் தெரிகிறது நான் கொடுத்தது அல்ல. வரதட்சணை எதுவும் எதிரிகள் தரப்பில் கேட்கவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

எனது மகளுக்கு திருமணத்தின்போது கொடுத்த நகைகள் நாங்கள் அடகு வைத்து வங்கியில் ஏலம் போனது என்றால் சரியல்ல, அது வேறு நகைகள் ஆகும். கனரா வங்கியில் ஏலம் போன நகைகள் எனது மகளுக்கு திருமணத்தின்போது கொடுத்த நகைகள் என்றால் சரியல்ல. எனது மகளுக்கு வாங்கியதாக சொல்லப்படும் நகைகளுக்கு ரசீது எதுவும் போலீஸ் விசாரணையில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது மகளுக்கு மனநலம் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனநலம் பாதிக்கப்பட்டதால்தான் ஒட்டன்சத்திரத்தில் உள்ள ஒரு மனநல மையத்தில் சேர்த்தோம் என்றால் சரிதான். அங்கு சுமார் 4 மாதம் சிகிச்சை பெற்றார் என்றால் சரிதான். எனது மகள் மனநிலை பாதிக்கப்பட்டு அவருக்கு என்ன நடைபெற்றது என்று தெரியாமல் விஷம் அருந்திவிட்டார் என்றால் சரியல்ல. அதுவாகத்தான் சாப்பிட்டுவிட்டது. எனது பேரனை என் மருமகன் வளர்த்துக் கொள்ள தயாராக இருந்து வருகிறார் என்றால் அது எனது மகளின் முடிவை பொறுத்தது எனது பேரன் எங்களிடம் தான் இருக்க வேண்டும். சென்ற மாதம் வரை எனது பேரன் போடி நிர்மலா காப்பகத்தில் படித்து வந்தார் என்றால் சரியல்ல அது ஒரு வருடத்திற்கு முன்பு படித்து வந்தார்.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

ஒம்/ திரு. இராமநாதன்
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.295/2019 Date: 26.11.2024
Deposition of witness for prosecution: PW 2 ( LW3)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி.பேச்சியம்மாள் | Caste | |
| Father/ Husband Name | குணசேகரன் | Calling | விவசாயம் |
| Village | வாலிபாறை | Religion | இந்து |
| Taluk | ஆண்டிப்பட்டி | Age | /2024 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 26.11.2024 TIME 01.20 P**m**

1ம் எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜரில்லை. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

வானதி எனது மகள் ஆவார் 1வது எதிரி எனது மருமகன். 2, 3 எதிரிகள் எனது சமந்தாரர்கள். 4வது எதிரி என் மருமகனின் சகோதரர் ஆவார். எனது மகள் வானதிக்கும் கம்பத்தைச் சேர்ந்த பிரகாஷ் என்பவருக்கும் பெரியவர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது 20 பவுன் தங்கநகையும், 20 லட்சம் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்களும் எனது மகளுக்கு போட்டோம். திருமணத்திற்கு பிறகு இருவருக்கும் ஆண் குழந்தை பிறந்தது. எனது மகளை என் மருமகன் அழைத்து தற்போது வரை வாழ மறுத்துவருகிறார். அதன் பின்னர் ஆண்டிபட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து போலிசார் என்னை விசாரித்தார்கள். உத்தமபாளையம் போலிசாரும் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

தற்போது எனது மகளை மருமகனுடன் சேர்ந்து வாழ சொல்லித்தான் சாட்சியளிக்கிறேன் என்றால் சரிதான். ஆண்டிப்பட்டி காவல் நிலையத்தில் 17.5 பவுன் போட்டதாக எழுதிக்கொடுத்தோம் என்றால் 7 பவுன் வாங்கி கொண்டதாகத்தான் எழுதிக்கொடுத்தோம். உத்தமபாளையம் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

ஒம்/ திரு. இராமநாதன்
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.